## *நாள் 1: அர்த்தமுள்ள சமுதாயம்*

## *வேதவாசிப்பு: யோவான்: 14 : 18 - 26*

## *தியானம்:*

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு பிரியா விடை கொடுக்கிற நிகழ்ச்சியைத்தான் இந்த பகுதியில் காண்கிறோம். குழந்தைகள் காப்பகத்தில் முதல்முறையாக தனியாக விடப்பட்ட ஒரு வயது குழந்தையைப்போல சீடர்கள் கலங்கியிருந்தனர். அவர்களைத் தம்முடைய தவிர்க்க முடியாத மரணத்திற்கு ஆயத்தம் பண்ணும்படி, இயேசு முயன்று கொண்டிருந்தார். ஆனால் சீடர்களோ ஆறுதலடைவதற்கு பதிலாக கலங்கிப் போய், அதிகமாக குழம்பியிருந்தனர். இயேசு தங்களையெல்லாம் விட்டுப் போகப் போகிறரென்று சீடர்களுக்கு புரிந்தது. ஆனால் அவரோ "நான் உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்" என்றார். சீடர்களோ அதைக் கேட்டு திகைத்துப் போய் இருந்தனர். மேலே சொல்லப்பட்ட அந்த ஒரு வயது குழந்தையிடம் " இன்னும் ஒரு சில மணி நேரங்களில் நான் திரும்பி வந்து விடுவேன்" என்று ஆறுதல் சொல்லுகிற தாயைப் போல இயேசுவும் தம் சீடர்களுக்கு ஒரு உத்தரவாதம் கொடுக்கிறார். தாம் திரும்ப வருவேன் என்று அவருடைய வருகையைப் பற்றி சொல்லுகிறார். அவர்களை விட்டு பிரிந்தவுடன் எப்படி அவர்கள் இயேசுவைக் காண முடியும்? எப்படியெனில் அவரை விசுவாசிக்கிறவர்களால் மட்டுமே அவரைக் காண முடியும். இயேசு இந்த உலகத்திலிருந்த நாட்களில், அவர் தான் தேவனுடைய குமாரன் என்று இந்த உலகம் அவரை நம்பவில்லை.அப்படியிருக்க அவர் உயிர்த்தெழுதலை மட்டும் அவர்கள் எப்படி நம்புவார்கள். இயேசுதேவனுடைய குமாரன் என்று நம்புவதே அவர் மேலுள்ள விசுவாசமாகும். பிதா அவரை இந்த பூமிக்கு ச்ச்அனுப்பினார். இயேசு தேவனோடிருந்தர், தேவனும் அவரோடிருந்தார். இயேசு பிசாசு பிடித்தவரென்றும் அவர் தேவதூஷணம் சொல்லுகிறவரென்றும் யூத மதத் தலைவர்கள் அவரை ஒதுக்கினர். அநேகர் இயேசு செய்த அற்புதங்களைக் கண்டதினால் அவருடைய அற்புதங்களை நம்பினார்கள். ஆனால் அந்த அற்புதங்கள் யாரால் செய்யப்பட்டது என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதையும், தேவன் அவருக்குள் இருந்து இந்த அற்புதங்களை செய்கிறாரென்றும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜனங்கள் இயேசுவை தங்கள் தேவைகளைச் சந்திக்கிற ஒருவராகத்தான் பார்த்தார்கள். ஆண்டவரின் வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிபந்தனைகளோடு கூடியவைகள். இயேசுவின் மேல் அன்பாயிருந்து உண்மையாய் அவரது வார்த்தைகளைக் கைக்கொண்டு பிறரை நேசிக்கிறவர்கள் தேவனுடைய அன்பின் பரிபூரணத்தை உணர முடியும். தேவன் எப்படி இயேசுவுக்குள்ளிருந்து அற்புதங்களை செய்தாரோ அப்படியே ஆவியானவரும் சீடர்களுக்குள் இருந்து அவர்களை பலப்படுத்தினார். யோவான் சுவிசேஷத்தில் இந்த அதிகாரத்தில் தான் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி முதன்முதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவருக்கு தேற்றரவாளர், ஆலோசகர், உதவியாளர், மற்றும் எங்கும் நிறைந்திருப்பவர் என்று பல பதங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் சர்வ வியாபியாய் எங்கும் நிறைந்து காணப்படுகிறார். சத்திய ஆவியானவர் தேவனுடைய வார்த்தையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். இயேசுவானவர் ஆவியானவர் மூலம் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்குள் வாசம் செய்கிறார். இப்படி முப்பரிமாணமுள்ள, தெய்வீகமான அரூபியாய் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராக மூவரும் ஒன்றாய் வாசம் செய்வதைத் தான் திரித்துவம் என்று அழைக்கிறோம். இப்படியாய் நாம் தனித்து விடப்படாமல் அவருக்குள் பெலன் கொள்ளுகிறோம். ஆமென்.*

***கலந்துரையாடல்:*** *யோவான் 14:12ல் இயேசு தம்முடைய சீடர்களை நோக்கி, என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்த கிரியைகளை தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்"என்றார். இதை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?*

***ஜெபம்:*** *பிதாவே உம்முடைய சமூகத்தில் நாங்கள் ஒன்று கூட செய்த வாய்ப்புக்காக உமக்கு நன்றி. நீர் எங்களை அழைத்த ஊழியத்திற்கு எங்கள் இருத்யங்களையும், கைகளையும் பெலப்படுத்துகிற நேரமாய் இந்த நேரம் இருப்பதாக. ஆண்டவரே பெண்களாய் கூடி உம்முடைய ஊழியத்தை செய்ய வந்திருக்கிறோம். எங்கள் சகோதரிகளுக்கு ஆதரவைக் காட்டும் படி இந்த சமுதாயத்தில் எங்களை ஒன்றாய் இணைத்தருளும். நாங்கள் வசிக்கிற இடங்களிலே, அன்பையும், சமாதானத்தையும், நீதியையும் நாடும்படியான வாஞ்சையை எங்கள் இருதயத்திலே வைத்தருளும். ஆமென்.*

*நாள் 2: சேவை செய்யும் சமூகம்*

*வேத வாசிப்பு: யாத்திராகமம் 1: 15 -22*

*தியானம்:*

*நமக்கு கொடுக்கப்பட்ட இந்த வேத பகுதியில், பார்வோன் எபிரேய தாய்மார்களுக்கு பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் பிறந்தவுடன் நைல் நதியில் வீசி விடும்படி கட்டளையிட்டதை காண்கிறோம். இப்படியாக பல குழந்தைகளும் கொல்லப்பட்டனர். ஏன் இப்படிப்பட்ட ஒரு இனப்படுகொலை? காரணம் என்ன? முதலாவதாக, பார்வோன் எபிரெய மருத்துவச்சிகளிடம் எபிரெய தாய்மார்களுக்கு பிறக்கும் அனைத்து ஆண் பிள்ளைகளையும் கொல்லும்படி கட்டளையிட்டும் அந்த காரியத்தில் அவன் தோல்வி கண்டான். சிப்பிராள், பூவாள் என்னும் அந்த மருத்துவச்சிகள் தங்கள் உயிரையும் பணையம் வைத்து எபிரெய குழந்தைகளைக் காப்பாற்றினர். இப்படிப்பட்டக் காரியத்தை செய்ய யாரும் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. நான்கு தலைமுறைக்கு முன்பு, இஸ்ரவேலர்களுக்கு எகிப்து ஒரு பாதுகாப்பான இடமாக இருந்தது. எகிப்தில் பஞ்சம் ஏற்பட்டு, தங்கள் முற்பிதாவாகிய யோசேப்பு அந்த பஞ்சத்திலிருந்து எகிப்தைக் காப்பாற்றிய போது இஸ்ரவேலர்கள் எகிப்துக்குச் சென்றனர். அப்போது இஸ்ரவேலர்களை எகிப்தியர்கள் நன்கு பராமரித்துக் கொண்டனர். நாளடைவில் இஸ்ரவேலர்கள் பலுகி, பெருகி மிகப் பெரிய ஜனக்கூட்டமானார்கள். வெளி நாட்டவர்கள் பெருகியவுடன் உள்நாட்டில் உள்ள மக்களுடைய மரியாதை குறைந்துவிட்டதுபோல் ஆகி விட்டது. எகிப்திலே யோசேப்பை அறியாத ஒரு ராஜா தோன்றினான்; யோசேப்பு பஞ்சகாலத்தில் எப்படி எகிப்தை காப்பாற்றினான் என்பதையெல்லாம் நினைக்காமல், இஸ்ரவேல் ஜனங்களை அடிமைகளைப் போல நடத்தினான். எபிரேய மருத்துவச்சிகளாகிய சிப்பிராள், பூவாள் என்பவர்கள் சர்வவல்ல தேவனாகிய ஆண்டவரின் திட்டத்துக்கு உண்மையுள்ளவர்களாய் நடந்து, ஏலோஹிம் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற உறுதுணையாய் செயல்பட்டார்கள். அவர்கள் பார்வோனைக் காட்டிலும் தேவனுக்கு மிகவும் பயந்து நடந்தார்கள்.தங்களது சொந்த வாழ்க்கையைக் காட்டிலும் , இஸ்வேலில் உள்ள பெண்கள், குழந்தைகளுடைய சமுதாயத்தை மிகவும் மதித்தார்கள். தங்கள் ஜீவனே போனாலும் பரவாயில்லை என்று, பார்வோனுடைய கட்டளைக்கு கீழ்படியாமல் இருந்து விட்டார்கள். “நாம் நன்மைக்கு துணை போவது மட்டுமல்ல, தீமைக்கு எதிர்த்து நிற்க பழக வேண்டும்” என்று ரெவ. டாக்டர்.மார்டின் லூதர் கிங் ஜூனியர் தனது சுயசரிதையில் சொல்லியிருக்கிறார்; இதில் எனக்கு எந்தவித மாற்று கருத்தும் இல்லை என்கிறார். எபிரேய மருத்துவச்சிகள் ராஜ கட்டளைக்கு கீழ்படியாவிட்டால் உண்டாகும் ஆபத்தை பெரிதாக நினைக்காமல் அதையும் சந்திக்க தயாரானார்கள். மறுபடி மறுபடியும் நமது விசுவாசம் நமக்கு கற்பிக்கும் காரியம் என்னவென்றால் “சத்தியம் நம்மை விடுதலையாக்கும்”. இறுதியாக சிப்பிராள், பூவாள் என்பவர்கள் குழந்தைகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ராஜாவிடம் பொய் சொல்லவும் துணிந்து விட்டார்கள். பார்வோனுடைய முதல் திட்டம் தோல்வியில் முடிந்து விட்டாலும் கூட ,இஸ்ரவேலர்களை ஒடுக்குவதற்குரிய எல்லா வழிமுறைகளையும் செய்ய அவன் தயாராக இருந்தான். எனவே தான் இஸ்ரவேலர்களை கொல்லுவதற்குரிய அனுமதியை எகிப்தியர்களுக்கு கொடுத்து இருந்தான். ஆனால் அவனுடைய எந்த திட்டங்களுமே ஆண்டவரை நேசிக்கிற, ஆண்டவருக்கு பயந்து நடக்கிற பிள்ளைகளிடம் செயல்படாமல் போய் விட்டது. ஆண்டவரது தலையீடு மட்டும் ஒருவரது வாழ்க்கையில் இருக்குமானால், சாதாரண மக்களும் கூட அசாதாரமான காரியங்களை செய்ய முடியும். ஆண்டவருடைய ரட்சிப்பின் திட்டத்துக்கு அவர் யாரை வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும்.*

*கலந்துரையாடல் : உங்களது சமுதாயத்தில் நாட்டு பற்று என்ற பெயரில் பெண்களும் பிள்ளைகளும் என்னவிதமான பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர்?*

*ஜெபம்: அன்புள்ள ஆண்டவரே நாங்கள் ஒன்று கூடி இன்று உம்மை சேவிக்க வந்திருக்கிறோம். சிப்பிராள், பூவாள் போல நாங்களும் உம்மில் உறுதியாய் இருக்க உதவி செய்யும். உமக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவி செய்யும். உம்முடைய திருத்தொண்டை செய்யக் கூடிய உதவியாளர்களாகவும், அருட்பணியாளர்களாகவும், சிறந்த குடும்பத் தலைவிகளாகவும் இருக்க எங்களை அழைத்திருக்கிறீர். உமக்கு நாங்கள் சிறந்த ஊழியம் செய்ய சமுதாயமாக எங்களை ஒன்றிணையும். உம்முடைய அழைப்புக்கு கீழ்படிந்து, உம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாக நாங்கள் வாழ எங்களுக்கு உதவி செய்யும். ஊழியம் செய்ய எங்களை ஊக்குவித்து, தைரியப்படுத்தும். ஆமென்.*

## *நாள் 3: நன்றியுள்ள சமுதாயம்*

## வேத வாசிப்பு: எபிரேயர் *10:24,25*

*எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தை ஒரு நிருபம் என்று சொல்வதைவிட ஒரு சிறந்த பிரசங்கம் என்று சொல்லலாம். கிறிஸ்த்துவத்தை ஏற்றுக்கொண்ட யூதர்களுக்கு எபிரேய வேதாகமம் ஒரு அவசிய வழிகாட்டியாக இருந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால், அவர்கள் தங்கள் பழைய பழக்கங்களையும் சமுதாயதாய வழக்கத்தையும் விட வேண்டியிருந்தது . இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் இவர்களுடைய வாழ்க்கை அற்புதமாக மாறியிருப்பினும், இயேசுவின் சமுதாயத்தில் இருப்பது அவ்வளவு சுலபமாகயில்லை. துன்புறுத்தலுக்கும் சிறைப்பிடிப்புக்கும் உட்ப்பட்ட ஒரு சிறுபான்மை கூட்டத்தில், இந்த புதிய கிறிஸ்தவர்கள் ஒரு சிறுபான்மையினராயிருந்தார்கள். ஆதலால், இந்த நிருபத்தில், பல விதங்களில் இந்த நூலின் ஆசிரியர் அவர்களை ஊக்குவிக்கிறார். நாம் இன்று தியானிக்கவிருக்கும் இந்த பகுதியில், எப்படி இப்படிப்பட்ட சவால்கள் நிறைந்த சமுதாயத்தில் இருப்பதால் நமக்கு நேரிடும் பயரங்களிலிருந்து நம்மை எப்படி காத்துக்கொள்வதென்று பார்ப்போம்:*

1. *சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் நேசித்து நன்மைச்செய்யும்படி ஊக்குவிப்பது.*
2. *ஐக்கியத்தில் நிலைத்திருப்பது*
3. *ஒருவரை ஒருவர் பெலப்படுத்துவது.*

*'தூண்டுதல்' என்பது எப்போதும் ஒரு விரும்பதகாத செயலாயிருக்கிறது. ஆனால், ஒருவரை ஒருவர் நேசிக்க சொல்லி தூண்டுவதற்கு இரக்கம், நீடியப்பொறுமை, ஜெபம் மற்றும் பயிற்சி தேவை. இந்த புதிய யூத கிறிஸ்தவர்கள் ஒருவரை ஒருவர் மாத்திரம் அல்ல மொத்த சமுதாயத்துக்கும் நன்மை செய்து பிறரை நேசிக்கும்படி ஊக்குவிக்க வேண்டியிருந்தது. இதனால்தான் ஐக்கியம் ஒரு முக்கிய கருவியாயிருக்கிறது. ஐக்கியங்களின் மூலமாகதான் நாம் கடந்து போகும் பிரச்சனைகள் ஏதோ வித்தியாசமான பயங்கரமான காரியங்களல்ல, அவைகள் பிறர் வாழ்க்கையிலும் நேரிடக்கூடியவைகளென்றும், அந்த பிரச்சனைகளை பிறர் எப்படி சந்திக்கிறார்களென்றும் தெரிந்துக்கொள்ளமுடியும். ஐக்கியங்கிளின் மூலமாக வெவ்வேறு பின்னனிகளிலிருந்து வரும் அநேகரை நாம் சந்திக்க முடியும். தங்கள் சந்தோஷங்கள் மற்றும் சோகங்களை பகிர்ந்துக்கொள்ள ஒரு தளமாக அமையும். இந்த காலத்தில், நமது வேத ஆராய்ச்சி குழுக்களும் சபைக்குழுக்களும் இப்படிப்பட்ட ஐக்கியத்திற்கான வாய்ப்பை தருகிறது. இந்த எபிரேய நிருபம், கிறிஸ்தவர்கள் ஏன் இயேசுவை பின்பற்ற முடிவெடுத்தார்கள் என்று அவர்களுக்கு திரும்பவும் நியாபகப்படுத்துகிறாது. இப்படிப்பட்ட உற்சாகம், நம்மை அமிழ்த்தும் மன அழுத்தங்களை களைந்து, நம்மை பெலப்படுத்தி நமக்கு ஊட்டமளிக்கும். இப்படிப்பட்ட கொடுக்கும் மனப்பான்மையின் அருமை, நாம் தேவனிடத்திலுருந்து பெற்றுக்கொண்டதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். இந்த எபிரேயர்கள் தேவனுடைய பெரிதான பரிசாகிய தமது அன்பை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பெற்றுக்கொண்டார்கள். இயேசுவே தமது சிங்காசனத்தை விட்டு, நம்மை இரட்சிக்க இறங்கி வந்தது, நமக்கு ஒரு முன்மாதிரியாக நாம் எப்படி எளிய சமுதாயங்களிலிருப்பவர்களுக்கு உதவுமுடியுமென்று காட்டியிருக்கிறார். இயேசு அவர்களை நேசிக்கிறாரென்று அவர்களுக்கு நமது சேவைகள் மூலமாகவோ அல்லது ஆறுதலான வார்த்தைகள் மூலமாகவோ வெளிப்படுதுவதே போதுமான பரிசு. இப்படிதான் அந்த எபிரேயர்களும் ஒருவரை ஒருவர் தாங்கினார்கள். இதுவே தேவனின் அன்பின் சமுதாயம்.*

கலந்துரையாடல்*: நீங்கள் ஒருவருக்கு கொடுத்த ஏதாவதொரு பரிசு அவர்களுடைய வாழ்க்கையை மாற்றியதா? நீங்கள் ஏன் அந்த பரிசைக்கொடுத்தீர்கள்?*

## ஜெபம்*:*

*பிதாவே, நாங்கள் பிறருக்கு உதவவும் உற்சாகப்படுத்தவும் கொடுத்த வாய்ப்புகளுக்காக உமக்கு நன்றி. தேவையுள்ளோர்களுக்கும் எளியோர்களுக்கும் உதவும் மனப்பான்மையை எங்களில் சிருஷ்டியும். நாங்கள் பிறருக்கு கொடுப்பது அவர்களுக்கு ஆசீர்வாதமாக அமையும்படி கிருபை செய்தருளும்.*

*நாள் 4: அக்கறை கொண்ட சமூகம்*

*வேதவாசிப்பு: லூக்கா 2: 1 – 7*

*தியானம்:* லூக்கா இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி சொல்லும்போது அங்கே சுற்றிலும் நடந்த அநேக சம்பவங்களைப் பற்றி கூறுகிறார். மரியாள் இயேசுவை பிரசவிப்பதற்கு ஏறக்குறைய 80 மைல் தூரம் நடந்து செல்ல வேண்டி இருந்தது. எந்த ஒரு ஆர்பாட்டமும், ஆடம்பரமும், கொண்டாட்டமும், ஆரவாரமும் இல்லாமல்தன் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஒரு ஏழைக் குடிசையில் ஆடுமாடுகள் மத்தியில் தான் அவர்கள் தங்குவதற்கு இடமே கிடைத்தது. அவர்களுடைய சூழ்நிலை மிகவும் மோசமானதாக காணப்பட்டாலும் தங்களுக்கு கிடைத்தவற்றிற்காக ஆண்டவருக்கு அவர்கள் நன்றி செலுத்தினார்கள். பெண்களுக்கு இயற்கையிலேயே தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டவும்,தாயின் உடல்சூடே பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த அரவணைப்பாகவும் அமைந்திருக்கிறது. மரியாளும் தன் குழந்தையை துணிகளில் சுற்றி முன்னணையில் படுக்க வைத்து இருந்தாள். தொட்டிலே இயேசுவுக்கு கட்டிலாகவும், வைக்கோலே மெத்தையாகவும் இருந்தது. மரியாள் தனக்கு ஏற்பட்ட இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்காக கவலைப்பட்டுக் கொண்டு இருந்திருக்கலாம். ஆனால் இந்த சூழ்நிலைகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். மரியாள் தேவதூதன் தன்னிடம் வந்து பேசியவுடன் அந்த வார்த்தைக்கு கீழ்படிந்து, ஏற்றுக் கொண்டு ஆண்டவரே உம் சித்தம் என் வாழ்க்கையில் நடக்கட்டும் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் பிரயாணம் முழுவதிலும் ஏற்பட்ட அலைச்சல்கள், மனஉளைச்சல்கள், அவமானங்கள், தங்குவதற்கு கூட இடமில்லாத சூழ்நிலைகள் ஏன் ஏற்பட்டது? குடிமதிப்பெழுதப்படுபடிக்கு மரியாளோடே கூட அவளுடைய உறவினர்கள், அண்டை அயலார் அனைவரும் பெத்லேகேமுக்கு சென்றிருப்பார்கள். ஒரு சிலர் அங்கேயே வசித்திருந்திருப்பார்கள். அநேகர் மரியாளைக் குறித்து தவறாக பேசியிருக்கலாம். அவதூறாக, மனம் நோகும்படி திட்டியிருக்கலாம். ஆனால் மரியாள் ஆண்டவருடைய சித்தம் நிறைவேறுவதற்காக எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டார்கள். பொதுவாகவே பெண்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்ற சில நேரங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. மாத்திரமல்ல மரியாள் என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவர் கேட்டுக் கொண்டாரோ அதை அவர்கள் செய்ய வேண்டியதாயிற்று. எப்படிப்பட்ட கண்டனங்கள்,அவமானங்கள் வெளியிலிருந்து வந்தாலும் அவைகளைப் பற்றி கவலைப்படாமல்,வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒரு சந்தோஷத்தை மரியாள் தனக்குள்ளே வைத்து இருந்தார்கள். லூக்கா புத்தகத்தில் விவரித்துள்ளபடி இயேசுவைப் பார்க்க வ்ந்த முதல் விருந்தாளிகளே ஏழை மேய்ப்பர்கள்தான்.

நாம் வாழும் இந்நாட்களில் அந்நிய தேசத்திலிருந்து வந்து குடியேறியிருக்கும் அந்நிய தொழிலாளர் குடும்பங்கள், அகதிகளாக வந்து தங்கியிருக்கும் குடும்பங்கள், தங்களோடு ஆறுதலாய் யாராவது ஒரு வார்த்தை பேசமாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கலாம். ஏழைத் தாய்மார்கள், இளம் வயதிலே ஏமாற்றப்பட்டு கைவிடப்பட்ட இளம் தாய்மார்கள் இப்படிப்பட்டவர்கள் நாம் வாழும் இந்த சமூதாயத்தில் நம்மைச் சுற்றிலும் இருக்கலாம். இப்படி ஏமாற்றப்பட்ட பெண்கள், ,பலருடைய விமர்சனங்களுக்கும், அவமானமான பேச்சுக்களுக்கும் ஆளாகலாம். இவர்கள் ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்று நமக்குத் தெரியாது. நாம் இப்படிப்பட்டவர்களை எப்படி ஏற்றுக் கொள்ளுகிறோம். இவர்களை நாம் பார்க்கும் விதம் வேறு, ஆண்டவர் பார்க்கும் விதம் வேறு. ஆண்டவர் அவர்களுடைய வாழ்க்கையில் அவர்களுடைய தள்ளப்பட்ட நிலைமையை, அன்பு செலுத்த யாரும் இல்லாத நிலைமையை பார்க்கிறார். இப்படிப்பட்ட பெண்கள் மனரீதியாக, உணர்வுரீதியாக, ஆன்மீகரீதியாக பாதிக்கப்பட்டு இருப்பார்கள். சபையில் உள்ள பெண்களாகிய நாம் இப்படிப்பட்ட பெண்களை அடையாளம் கண்டு அவர்களோடு ஆறுதலான வார்த்தைகளைப் பேசி, அவர்களுகளை உற்சாகப்படுத்தி அவர்கள் ஒரு நம்பிக்கையான வாழ்வு வாழ நாம் வழிகாட்ட வேண்டும். பெத்லேகேமிலிருந்த அந்த சத்திரக்காரனைப் போல நம்மிடத்தில் உள்ளதை மற்றவர்களுக்கு கொடுக்கப் பழக வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலத்தில் பிறந்து எப்படி இந்த உலகத்திற்கு சந்தோஷத்தைக் கொடுத்தாரோ அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவருடைய அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து, அவர்களுக்கும் அப்படிப்பட்ட சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும்.

*கலந்துரையாடல்:* நம்பிக்கையற்ற நிலைமையில் வாழும் அந்நிய தேசத்தினர், ஏழைத்தாய்மார்கள், இளம் தாய்மார்களுக்கு கிறிஸ்துவ சமூதாயமாக நாம் என்ன மாதிரியான உதவிகளை செய்யலாம்?

*ஜெபம்:* ஆண்டவரே அநேக ஜனங்கள் வீடு வாசல் இன்றி, தங்கள் சொந்த நாட்டை விட்டு அகதிகளாக, அந்நிய கூலிகளாக எங்கள் மத்தியில் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் . இப்படிப்பட்டவர்கள் ஒரு நல்ல, ஆரோக்கியமுள்ள சமூகமாய் அவர்கள் வாழ அவர்ளுக்கு உதவி செய்யும். ஆண்டவரே நாங்கள் அவர்களுக்கு உதவ,எங்கள் கண்களையும், எங்கள் இருதயத்தையும் திறந்தருளும். ஆமென்.

*நாள் 5: பராமரிக்கும் சமுதாயம்*

*வேத வாசிப்பு: ரூத் 1:16 - 2: 3*

*தியானம்:*

*நகோமி தன் கணவரும், தன் இரண்டு மகன்களும் மரித்தவுடன் தன் சொந்த ஊருக்கு மறுபடியும் திரும்ப வேண்டி இருந்தது. அக்காலத்தில் வீட்டில் ஆண்கள் இல்லையெனில் பெண்களுக்கு வருமனத்துக்கு வேறு வழியில்லை. நகோமி எவ்வளவு வற்புறுத்தியும் கூட ரூத் தன் மாமியை தொடர்ந்து பெத்லகேமுக்கு வந்தாள். நகோமியும் அவளுடைய மருமகள் ரூத்தும் வயலுக்கு சென்று அறுப்பு அறுக்கிறவர்கள் பின்பு சென்று விழும் கதிர்களை பொறுக்கினால் தான் அவர்களுக்கு உணவு கிடைக்கும். நகோமி பெத்லெகேமுக்கு வந்தவுடனே அவளை பார்க்க அவளுடைய உறவினர்கள் அனைவரும் வந்து விட்டனர். ஆனால் நகோமி அவர்களைப் பார்க்க ஆர்வமாக இருந்தாளோ இல்லையோ, வேதத்தில் காணப்படுகின்ற பதிவு, அவள்,"நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல் மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய் போனேன். கர்த்தர் என்னை வெறுமையாய் திரும்பி வரப் பண்ணினார்" (20 -21) என்றாள். நகோமி தற்போதுள்ள சூழ்நிலைகளைப் பார்த்து ஆண்டவரை குறை கூற தொடங்கினாள். ரூத்தின் மூலமாக , அவள் பிடிவாதமாய் தன் மாமியை பின்பற்றினதின் நிமித்தமாக ஆண்டவர் அவர்களை ஆசீர்வதிக்கப் போவதை அவள் உணர்ந்து கொள்ளவில்லை. நகோமியும் அவளுடைய கணவன் எலிமெலேக்கு, அவனுடைய இரண்டு குமாரர்கள் மக்லோன், மற்றும் கிலியோன் என்பவர்கள் 10 வருடங்களுக்கு முன்பு பெத்லகேமில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தினிமித்தமாக மோவாபு தேசத்தில் குடியேறியிருந்தார்கள்.நகோமி என்பதற்கு சந்தோஷம் அல்லது மதுரம் என்று அர்த்தம். ஆனால் அவள் இப்போது சோர்வுற்றவளாக, ஏழ்மை நிலையில் வாழ்ந்து வந்தாள். தனது கணவனது நிலமும் இப்போது மற்றவர்கள் கையில் உள்ளது. நமது சமுகத்திலும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் உள்ள பெண்கள் உண்டு. ஒருவேளை நம் மத்தியில் இப்படிப்பட்டவர்கள் இருந்தால் நாம் அவர்களுக்கு எப்படி உதவுவோம். இஸ்ரவேலில் நிலம் உள்ளவர்கள் தங்கள் வயலில் அறுப்பு அறுக்கும்போது அரிக்கட்டுக்கட்டுகளிலிருந்து சிந்தினவைகளை ஏழைகள் நிலம் இல்லாத அந்நியர்களுக்கு பொறுக்கிக் கொள்ளும்படிக்கு விட்டு விடுவார்கள். இவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு ஆசீர்வாதம் மறுபடியும் ரூத்தின் மூலமாக வருகிறது. எப்படியெனில், ரூத் வயலில் கதிர்களைப் பொறுக்கிக் கொள்ள சென்ற இடம் நகோமி உறவினனான போவாஸின் வயல். அப்பொழுது போவாஸ் அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட தன் வேலைக்காரன் மூலமாய் அவள் நகோமியின் உறவினள் என்று அறிந்து கொண்டான். போவாஸ் தன் வேலைகாரனைப் பார்த்து அவளுக்கு சிறப்பு சலுகைகள் கொடுத்து அவர்கள் வயலிலேயே இருந்து தேவையானதை எடுத்துக் கொள்ளவும் தன் வேலைக்கார்களோடே சாப்பிடவும், தண்ணீர் குடிக்கவும் கட்டளையிட்டான். மீதியானதை தன் மாமிக்கும் கொண்டு செல்லக் கட்டளையிட்டான். ரூத் தன் கணவன் இறந்தவுடன் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல், தன்னுடைய எதிகாலம் பற்றி கூட நினைக்காமல் தன் மாமியைப் பின் தொடர்ந்ததற்கு ஏற்ற பலனை தேவன் அவளுக்கு கொடுத்தார். போவாஸ் ரூத்தை திருமணம் செய்து கொண்டு அவளையும், நகோமியையும் பராமரித்தான். அவர்கள் ஒரு குமாரனைப் பெற்று இந்த சமுதாயத்திற்குக் கொடுத்து அவனுக்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்.நகோமி அந்தப் பிள்ளையை தன் மடியிலே வைத்து வளர்த்து அதற்கு தாயானாள்.கடைசியாக தனக்குண்டானதையெல்லாம் மீட்டுக்கொண்டாள்.அவள் சமூகத்தினர் அனைவரும் அவளோடு சேர்ந்து ஆரவாரப்பட்டனர். ஒபேத் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்.இயேசு கிறிஸ்துவும் அந்த வம்சத்திலிருந்துதான் வந்தார். ரூத்தின் வரலாறு ஒவ்வொரு பெண்களும் எப்படி சமுதாயத்தோடு ஒற்றுமையாக, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்.நகோமியும், ரூத்தும் மீட்கப்பட்டார்கள்.இந்த அழகான கதையில் வருவதைப் போல தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை மீட்டுக்கொள்வதற்காக நமக்கு இரண்டாவதாக ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறார்.ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.*

*கலந்துரையாடல்: அநேக நேரங்களில் நாம் பிரச்சனைகள் மத்தியில் கடந்து போகும் போது,ஆண்டவர் நமக்கு இதுவரைக் கொடுத்த ஆசீர்வாதங்களை மறந்து போய் விடுகிறோமா??*

*ஜெபம்: உலகத்தில் மனிதர்கள் எவ்வளவு கொடுமையானவர்களாய் இருக்கிறார்கள் ஆண்டவரே. இவைகளையெல்லாம் எங்களால் ஏற்றுக்கொள்ளவும், நம்பவும் முடியவில்லை. தங்கள் சுய லாபத்திற்காக பொய் சொல்வதும், கடப்பிதழ்களை திருடுவதும்,பெண்கள் மற்றும் பிள்ளைகளை சிறைபிடிப்பது போன்ற காரியங்களை செய்து வருகிறார்கள். இவர்கள் இவ்விதமான 'ஆள் கடத்தல்' வலையில் சிக்கிக்கொள்ளாத படிக்கு, தேவையுள்ள இச்சனங்களுக்கு சட்டரீதியான நியாயமான வேலை கிடைக்கும்படி அருள்புரியும், இதை நாங்களும் கண்டும் காணாதவர்கள் போல் இருந்து விடுகிறோம்; எங்கள் மேல் தயையுள்ளவராயிரும். எங்கள்மேல் இரக்கமாகி நாங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய எங்களுக்கு கிருபை செய்தருளும்.. ஆமேன்.*

*நாள் 6: சமுதாயத்தில் தாய்மார்கள்*

*வேதவாசிப்பு: லூக்கா 2: 36-38*

*தியானம்: ஒருமுறை ஒரு போதகரிடம் ஒரு பெண் வந்து, சபைகளில் தாய்மார்கள் எப்படிப்பட்ட பங்கை ஆற்ற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்று கேட்டார். அந்த போதகரால் உடனே பதிலளிக்க முடியவில்லை. சிறிது நேர தயக்கத்திற்குப் பிறகு அவர் அந்த பெண்ணிடமே, யார் சபையின் தாய்மார்கள் என்று கேட்டார். யாரெல்லாம் மற்றவர்களிடம் உண்மையான பரிவும்,கரிசனையும், அன்பும், பொறுமையும் காட்டுகிறார்களோ அவர்கள் எல்லாருமே தாய்மார்கள்தான் என்று சொன்னார். எல்லா சபைகளிலும் ஆண்டவர் அநேக தாய்மார்களைக் கொடுத்து சபைகளை ஆசீர்வதித்து இருக்கிறார். சில நேரங்களில் சபை ஆராதனை நேரங்களிலும், மற்ற அநேக காரியங்களிலும் தாய்மார்கள் தேவையான ஆலோசனைகளை வழங்கி, சபைகளையும் விசேஷமாக இளம் தாய்மர்களையும் சரியான வழிகளில் நடக்க உதவுகின்றனர். லூக்கா புத்தகத்தில், அதன் ஆசிரியர் அன்னாளுக்கு ஒரு சிறந்த முன்னுரையை கொடுத்து இருக்கிறார். அன்னாள் என்பதற்கு கிருபை நிறைந்தவள் என்று அர்த்தம்.அவர்களுடைய முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் அவர்களுடைய தகப்பன் பெயர், கோத்திரம் மற்றும் அவர் ஒரு சிறந்த தீர்க்கதரிசி என்ற எல்லா விபரங்களையும் குறிப்பிட்டுள்ளர். வேதத்தில் அன்னாளுடைய வாழ்க்கை அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இயேசுவைக் குறித்து , அவரைக் கண்டவுடன் இஸ்ரவேலில் மீட்புண்டாக வந்தவர் இவர்தான் என்பதை அவர்களுடைய உள்ளான இருதயத்தில் உடனே உணர முடிந்தது. இந்நாட்களில், அன்னாளைப் போல சபைக் கூட்டங்களை நடத்துவதிலும், ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதிலும், எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செலுத்துவதிலும், அன்பிலும், மனவுருக்கத்திலும், சபையை சுற்றி நடக்கிற காரியங்களை உள்ளுணர்வால் உண்ர்ந்து அதற்கேற்ற ஆலோசனைகளை சொல்லுவதிலும், உண்மையான காரியங்களை மட்டுமே பேசும் தாய்மார்களை இன்று சபைகளில் நம்மால் பார்க்க முடிகிறதா??அசுத்தங்கள் நிறைந்திருந்த அந்நாட்களில் அன்னாள் தன் பரிசுத்தத்தில் உறுதியாக இருந்து சபையில் ஒரு முன்னுதாரணமான தாயாக விளங்கினார். அவர் தீர்க்கதரிசனமாக இயேசுவே இஸ்ரவேலை மீட்கப்போகிற மீட்பர் என்பதை உறுதியாக கூறினார். இயேசுவின் தாயாகிய மரியாளும் கூட தைரியமானவராக, ஆண்டவருடைய சித்தம் செய்வதில் கீழ்படிந்தவராக,விசுவாசத்தில் உறுதியானவராக ஒரு சிறந்த முன் மாதிரியான தாயாக இருந்தார்.நமது சபைகளில் இருக்கும் தாய்மார்களும் அன்னாளைப் போல, மரியாளைப் போல சிறந்த தாய்மார்களாய் விளங்க வேண்டும். நமது சபையின் தாய்மார்கள் இளம் தாய்மார்களுக்கும், வாழ்க்கையில் போராடிக்கொண்டிருக்கும் தாய்மார்களுக்கும் தங்களுடைய நேரத்தை ஒதுக்கி அவர்கள் நல் வழியில் ஆண்டவரோடு நடக்க உதவி செய்ய வேண்டும். நமது சபைகளில் ஆண்டவர் கொடுத்து இருக்கிற அருமையான தாய்மர்களுக்காய் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். ஆமென்.*

*கலந்துரையாடல்: இப்படிப்பட்ட நிலையில் உள்ள நமது சபையின் பெண்களுக்கு தாய்மார்களாகிய உங்களின் பங்களிப்பு என்ன? .*

*ஜெபம்:*

*கர்த்தாவே, எங்களோடு கூட இருக்கும் சகோதரிகளின் தேவைகளை அறிந்து அவைகளை சந்திக்க எங்களுக்கு கிருபை செய்வதற்காக உமக்கு நன்றி. அன்னாளைப்போல், எங்களுக்கு உம்முடைய வெளிப்பாடுகளை தாரும். தேவையுள்ளவர்களுக்கு நாங்கள் தகுந்த வகையில் உதவ எங்களுக்கு வழிகளை வாய்க்கப்பண்ணும்.. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் நல்ல பிதாவே. ஆமேன்.*

## *நாள் 7: கற்றுக்கொள்ளும் சமுதாயம்*

## *வேத வாசிப்பு: அப்போஸ்தலர் 16:13-15*

*தியானம் : பெத்தானியா மரியாள் ஆண்டவரின் பாதத்தின் அருகில் அமர்ந்திருந்து எப்படி காரியங்களைக் கற்றுக்கொண்டாளோ (லூக்கா 10:38-42) அதே போல லிதியாளும் புதிய காரியங்களைக் கற்றுக் கொள்வதில் மிகவும் ஆர்வமுடையவளாய் இருந்தாள். பவுல் குறிப்பிடும் போது அவர்கள் ஓய்வு நாள் தோறும் ஆற்றினருகே கூடி ஜெபம் பண்ணுகிற இடத்தில் லிதியாள் என்னும் ஸ்தீரியும் வந்து ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். லிதியாள் ஒரு சிறந்த ஞானமுள்ள பெண். அவள் ஞானத்தைத் தேடி கொண்டிருக்கும் ஒரு பெண். அவள் வியாபாரம் செய்வதைப் பற்றி அறிந்தாள். அவள் ஒரு சிறந்த வியாபாரி. லிதியாள் இரத்தாம்பரம் (PURPLE CLOTH) விற்கிற ஒரு ஸ்தீரியாய் இருந்தாள். இரத்தாம்பரம் என்பது ராஜ பரம்பரையினர் உடுத்தக் கூடிய ஒரு ஆடம்பரமான உடை.. லிதியாள் தன் வியாபாரத்தை எப்படி உயர்ந்த நிலையில் சிறப்பாக நடத்துவதென்று அறிந்திருந்தாள். ஏனெனில் வேதத்தில் அவளைப் பற்றிக் கூறும்போது அவளுடைய வியாபாரத்தில் அவளுக்குத் துணையாக எந்த ஆண்களும் இருந்ததாக குறிப்பிடவில்லை. லிதியாள் தன் சொந்த ஊரான தியத்தீராவிலிருந்து இரத்தாம்பர வியாபாரம் சிறந்து விளங்கக் கூடிய வியாபார ஸ்தலமான பிலிப்பு பட்டணத்திற்கு மாற்றி வந்திருந்தாள்.அவள் வியாபாரத்தில் ஒரு சிறந்த பெண்ணாக இருந்த போதிலும் ஆண்டவரை முழுமனதோடு தேடுவதில் சிறிதும் குறையவில்லை.அவள் ஒரு சிறந்த ஆராதனை தலைவியாக இருந்தாளா என்று தெரியவில்லை, ஆனால் பவுலும் மற்றவர்களும் கூடி ஜெபிக்க வருகையில் மற்ற பெண்களோடும் கூட வசனத்தைக் கேட்க ஆர்வமாய் வந்திருந்தாள் என்று வேதம் கூறுகிறது. சீலாவும், தீமோத்தேயுவும் சேர்ந்து செய்த ஊழியங்களில் இயேசுவே தேவன் என்று கூறி ஆண்டவர் வெளிப்படுத்தின காரியங்களை பவுல் அவர்களுக்கு உறுதுணையாய் இருந்து செய்து வந்தார்.இந்தக் காரியம் லிதியாளுடைய வாழ்க்கையில் ஊழியத்தின் மேல் ஒரு ஈர்ப்பு வரக் காரணமாக அமைந்தது.லிதியாளும் தன்னுடைய வாழ்க்கையை ஆண்டவருக்கென்று அர்ப்பணித்து தன் முழு இருதயத்தோடும், தன் முழு ஆத்துமாவோடும் அவருக்கு ஊழியம் செய்து வந்தாள்*

*ஒரு சிலர் பிறக்கும்போதே தலைமைத்துவ குணம் உடையவர்களாய் பிறக்கின்றனர். லிதியாளும் அப்படிப்பட்டவள்தான். வியாபாரத்திலும் சரி ஆண்டவரைப் பின்பற்றுவதிலும் சரி அவள் சிறந்து விளங்கினாள். இவள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டதினிமித்தம் அவளுடைய முழுக் குடும்பமும் இவளை பின்பற்றி ஆண்டவருக்குள் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று வேதம் குறிப்பிடுகிறது.அவள் அப்படிப்பட்ட தலைமைத்துவ குணம் உள்ளவளாய் இருந்ததினால் தான் வியாபார உலகத்திலும், ஆவிக்குரிய காரியத்திலும் அவளை அநேகர் பின்பற்றினர். ஐரோப்பாவில் இயேசுவை தன் சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்ட முதல் பெண் என்ற மதிப்பை பெற்றவள்.பவுலும்,சீலாவும், தீமோத்தேயுவும் ஊழியம் செய்த போது அவர்களை தனது வீட்டில் ஏற்றுக கொண்டு தன் வீட்டில் கூட்டங்கள் நடப்பதற்கு தன் வீட்டைத் திறந்து கொடுத்து, ஊழியங்கள் வளர்வதற்கும், அவைகள் தொடறவதற்கும் லிதியாள் காரணமாக இருந்துள்ளாள். அந்நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு அநேக உபத்திரவங்கள் காணப்பட்ட போதும் அவள் தைரியமாக தன் வீட்டில் ஊழியம் நடக்க உறுதுணையாய் இருந்தாள். லிதியாளின் இந்த செயல்தான் நாளடைவில் அந்த இடத்தில் ஊழியங்கள் வளரவும், சபைகள் பெருகவும் காரணமாக இருந்தது. பின் நாட்களில் பவுல் பிலிப்பு பட்டணத்தை விட்டு சென்ற பின்பும் கூட சபைகள் அந்த இடத்தில் மிகவும் உற்சாகமாய் வளர்ந்தது. காரணம் லிதியாளின் அர்ப்பணிப்பு. பவுல் தனது நிருபங்களில் குறிப்பிடும் போது, நீங்கள் தொடர்ந்து உற்சாகமாய் இந்த ஊழியங்களை செய்யுங்கள் என்று குறிப்பிடுகிறார். இப்படியாக லிதியாள் மூலமாக ஐரோப்பா தேசம் முழுவதும் ஊழியங்கள் வளர்ந்து பெருகிற்று.சபைகள் வளர்ந்தனச்ச். தொடக்கத்தில் அவள் வசனங்களைக் கற்றுக் கொள்ளத்தான் ஆர்வமாய் வந்தாள். இப்போது அவள் மற்றவர்களுக்கு ஆண்டவரைப் பற்றி கற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு ஆசிரியையாக மாறி விட்டாள்.அவளுடைய வீட்டு சபை புது விசுவாசிகளுக்கு அவர்களுடைய வாழ்க்கை மாறக்கூடிய இடமாகவும், புதிய காரியங்களைக் கற்றுக் கொள்ளவும், ஆண்டவரைத் துதிக்கக் கூடிய இடமாகவும் மாறி விட்டது.*

*கலந்துரையாடல்: ஒரு குறுகிய காலத்துக்குள் ஏதாவது புதிய காரியங்களைக் கற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்கு கற்று கொடுத்த அனுபவம் உண்டா?*

## *ஜெபம்:*

தேவனே, நீர் எங்களுக்கென்று வைத்திருக்கும் சித்தத்தை எங்களுக்கு வெளிபடுத்தி அதை நிறைவேற்றியருளும். லிதியாளுக்கு இருந்த தைரியத்தையும், தரிசனத்தையும் எங்களுக்கும் தாரும். பவுலைப்போல், மரியாளைப்போல் எங்களை பயன்படுத்தும். ஆமேன்.